SRI LANKA
IMMIGRATION AND EMIGRATION

திகதி: 2021-10.05
இலக்கம்: 19

# <u>ஊடக அறிவித்தல்</u>
# <u>குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்</u>

தற்போது இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் பெற்றுக்கொண்டுள்ள **அனைத்து விதமான வீசாக்களினதும்** செல்லுபடியாகும் காலம் 2021 **ஒக்டோபர் மாதம்** 07 **ஆம் திகதி முதல்** 2021 **நவம்பர் மாதம்** 06 **ஆம் திகதி வரை** 30 நாட்களால் நீடிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 2021 **மே மாதம்** 11 **ஆம் திகதி முதல்** 2021 **நவம்பர்** 06 **ஆம் திகதி வரையிலான** காலப்பகுதிக்குள் காலாவதியாகும் வீசாக்களுக்கு அக்காலப் பிரிவுக்கான வீசாக் கட்டணங்கள் மாத்திரம் அறவிடப்படும் என்பதோடு எந்தவித தண்டப்பணமும் அறவிடப்படமாட்டாது.

**<u>• சுற்றுலா வீசாக்கள் வைத்திருப்பவர்களுக்கு வீசாவை மேலொப்பமிட்டுக் கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் ;</u>**

அதற்கிணங்க, சுற்றுலா வீசாக்கள் வைத்திருப்பவர்கள் அந்த வீசாக்களை நீடித்துக்கொள்வதற்கான வீசாக் கட்டணங்களை செலுத்துவதற்கும் வீசாவை மேலொப்பமிட்டுக்கொள்வதற்கும் பின்வரும் முறைகளில் ஒரு வழிமுறையைப் பின்பற்ற முடியும்;

1. https://eservices.immigration.gov.lk/vs எனும் இணையத் தளத்திற்குள் பிரவேசித்து ஏற்புடைய கட்டணங்களைச் செலுத்தி இணைய வழியில் வீசாவைப் பெற்றுக்கொள்ளல் அல்லது (இலங்கைக்கு வருகைத்தந்த திகதியிலிருந்து உச்சமாக 09 மாதங்கள் வரை);
2. 2021 **நவம்பர் 06 ஆம் திகதிக்கு முன்னர்** நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு உத்தேசிக்குமிடத்து ஏற்புடைய வீசாக் கட்டணத்தை விமான நிலையத்தில் செலுத்தி நாட்டிலிருந்து வெளியேறுதல். அல்லது;
3. 2021 **நவம்பர் 06 ஆம் திகதிக்கு முன்னர்** பத்தரமுல்லை அலுவலகத்திற்கு வருகைத்தந்து ஏற்புடைய வீசாக் கட்டணத்தைச் செலுத்தி வீசாவை கடவுச் சீட்டில் மேலொப்பமிட்டுக்கொள்ளல்.

**<u>• வதிவிட வீசாக்களை வைத்திருப்பவர்களுக்கான அறிவுறுத்தல்கள்;</u>**

2021 **நவம்பர் மாதம் 06 ஆம் திகதி வரையிலான** வீசா நீடிப்பு அனைத்து செல்லுபடியாகும் வதிவிட வீசாக்களை வைத்திருப்பவர்களுக்கும் ஏற்புடையதாகும். அத்திகதிக்கு முன்னர் வீசாவை நீடித்துக்கொள்வதற்கு கடமை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை 0707101050 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து நாளொன்றையும் நேரத்தையும் ஒதுக்கிக்கொண்டு 2021 **நவம்பர் மாதம்** 06 **ஆம்** திகதிக்கு முன்னர் பத்தரமுல்லை அலுவலகத்திற்கு வருகைத்தந்து ஏற்புடைய வீசாக் கட்டணத்தைச் செலுத்தி வீசாவை மேலொப்பமிட்டுக்கொள்ளல் வேண்டும்.

- **<u>பொதுவான அறிவுறுத்தல்கள் மற்றும் தண்டப்பணம்</u>**

2021 **நவம்பர் 06 ஆம் திகதி** வரையிலான வீசா நீடிப்பு மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை காரணமாக நீடிக்கப்பட்டுள்ளது. அதன் பின்பு இவ்வாறு வீசாக்கள் பொதுவாக நீடிப்பதற்கு உத்தேசிக்கப்படவில்லை. மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை நிலவிய போதிலும் பத்தரமுல்லை அலுவலகத்திற்கு வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதனால் இந்த நாட்டில் தங்கியுள்ள அனைத்து வெளிநாட்டவர்களும் 2021 **நவம்பர் 06 ஆம் திகதிக்கு முன்னர்** மேற்படி அறிவுறுத்தல்களுக்கு அமைய தங்களது வீசாக்களை நீடித்துக்கொள்ளல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் வீசா இன்றி நாட்டில் தங்கியிருக்குமிடத்து ஏற்புடைய **தண்டப் பணமான 500 அமெரிக்க டொலர்களை** செலுத்த நேரிடும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**கட்டுப்பாட்டாளர் நாயகம்**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**